අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/05/67/01/gen viii
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2002.06.07

வலயக் கல்விப் பணிப்பாளர்கள
கல்வியியற்கல்லூரி பீடாதிபதிகள்
ஆசிரிய கலாசாலை அதிபர்கள்
தேசிய பாடசாலை அதிபர்கள்
ஆசிரிய நிலைய முகாமையாளர்கள்

**வருடாந்த இடமாற்றம் மற்றும் வருடாந்த இடமாற்றம் அல்லாத இடமாற்றங்கள் தொடர்பா கோரிக்கைகளை கல்வி அமைச்சிற்கு முன்னிலைப்படுத்தல் - கல்விசாரா பணிக்குழுவினர்**

கல்வி அமைச்சு மூலமாக நியமிக்கப்பட்ட கல்விசாரா பணிக்குழுவினர் தொடர்பாக, அரசாங்க ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இடமாற்ற நடைமுறைகளுக்கமைவாக, வருடாந்தம் வெளியிடப்படும் உள்ளக சுற்றுநிருபனமொன்றின் ஊடாக வருடாந்த இடமாற்றங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட வருடாந்த இடமாற்றம் கோரும் விண்ணப்பப்படிவம் ஒன்றும் அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

02. அந்த வருடாந்த இடமாற்ற விண்ணப்பங்களை பயன்படுத்த வேண்டியது, வருடாந்த இடமாற்ற விண்ணப்பங்க்ள கோரும் அறிவித்தல் வெளியிட்ட பின்னர் அது குறித்து உரிய பணிக்குழுவினரால் முன்வைக்கப்படும் வருடாந்த இடமாற்றம் கோருவது தொடர்பாக மாத்திரமே ஆகும். அதன் பிரகாரம் தமக்கு கீழ் பணிபுரியும் பணிக்குழுவினர்களால் முன்வைக்கப்படும் ஏனைய இடமாற்ற கோரல் தொடர்பாக அந்த விண்ணப்பங்கள் பயன்படுத்தக் கூடாது எனபதனை இத்தால் அறியத்தருவதுடன், இந்த விதிமுறைகள் 2022.06.15 ஆம் திகதி முதல் கட்டாயமாக பின்பற்றப்படல் வேண்டும்.

03 வருடாந்த இடமாற்றம் அல்லாத இடமாற்றங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள், உரிய அலுவலரினால தமது தேவையினை வெளிப்படுத்தும் கடிதம் ஒன்றுடன், நிறுவனத் தலைவரின் எழுத்துமூல பரிந்துரையையும் குறிப்பிட்டு அமைச்சின் செயலாளருக்கு முன்னிலைப்படுத்துவது போதுமானதாகும். அதன் பிரகாரம் 2022.06.15 ஆம் திகதிக்கு பின்னர் முன்வைக்கப்படும் கோரிக்கைகளை அமைச்சிற்கு முன்னிலைப்படுத்தும் போது அந்த செயல்முறையின்படி முன்னிலைப்படுதத வேண்டும்.

04 மேலும், வருடாந்த இடமாற்றம் போலவே வருடாந்தம் அல்லாத இடமாற்றங்கள் தொடர்பாக தமக்கு கீழே பணிபுரியும் பணிக்குழுவினரால மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் தொடர்பான முடிவுகளை எடுக்கும் இறுதி அதிகாரி கல்வி அமைச்சின் செயலாளர் என்பதால் அனைத்து கோரிக்கைகளும் நிறுவனத்தேவையின் பிரகாரம் பரீட்சித்துப்பார்த்த பின்னர் தெளிவான பரிந்துரையுடன் அமைச்சின் செயலாளருக்கு முன்னிலைப்படுத்துவது அனைத்து நிறுவனத்திலைவரிகளின் பொறுப்பாகும் என்பதனை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆர்.பீ. கங்கேவல
மேலதிக செயலாளர் (கல்விசாரா மற்றும் ஒருங்கிணைந்த சேவை)
செயலாளருக்காக

பிரதிகள்

01 சகல மேலதிழக செயலாளர்கள்
02 சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
03 பிரதான நிதி அதிகாரி
04 பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்)
05 தேசிய பாடசாலை பணிப்பாளர்
06 கல்வியியற்கல்லூரி ஆணையாளர்